செ.வெ.எண்:39/ஜனவரி நாள்:25.01.2016

**இராமநாதபுரம் மாவட்டத்தில் வருகின்ற பிப்ரவரி 9ஆம் தேதி முதல் இருவாரங்களுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-ஆம் ஆண்டுக்கு 09/02/2016 முதல் 22/02/2016 வரை இருவாரங்கள் கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் கால்நடை பராமரிப்புத்துறையினரால் நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் 1.65 இலட்சம் டோஸஸ் கோழிக்கழிச்சல் தடுப்பூசி மருந்துகள் பயன்படுத்தப்படவுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 11 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், இருவார கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் கிராமங்களில் உள்ள கால்நடை மருந்தகங்கள் மூலமாக கால்நடை பராமரிப்புத்துறையினர் உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

கோழிகளை வளர்க்கும் பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி கோழிக்கழிச்சல் தடுப்பூசிகளை கோழிகளுக்கு போட்டு பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**